★ செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# தந்தி

இல: 1119 1970 ஆகஸ்ட் 27 வியாழக் கிழமை ★ விலை சதம் 5

University of Jaffna Sri Lanka RECEIVED 7 - - 8 Periodicals Division Library

## மந்திரி சபை நேற்று அங்கீகரித்தது

# உள்ளூர் உற்பத்திகளின் விலையை குறைக்க திட்டம்

**உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலை உயர்வைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.**

அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் உற்பத்திக்கான மூலப் பொருட்களை அரசாங்கமே இனி இறக்குமதி செய்யத் தீர்மானித்து உள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரித்து உற்பத்தியாளர்கள் அதிக லாபம் பெறுகின்றனர். இதனைத் தடுக்கும் விதத்தில் அரசாங்க நிறுவனங்களில் மூலம் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் உற்பத்திக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்து விநியோகிக்க வேண்டும் என மந்திரி சபையில் கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்கா சமர்ப்பித்திருந்த திட்டம் நேற்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மந்திரி சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

### தண்டனை பெற்றவர்கள்

அரசியல் காரணங்களுக்காக தண்டிக்கப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்பட்டுக் கஷ்டமடையும் தனியார் வர்த்தக ஸ்தாபன ஊழியர் நிலைபற்றியும் அமைச்சரவை விவாதித்தது.

முதலாளிமார்களுடன் இவர்கள் நிலைமை பற்றி பேச்சு வார்த்தை நடாத்தி, நல்ல முடிவு காணும்படி தொழில் அமைச்சர் திரு. எம். பீ. டீ. இஸட் சிரிவர்த்தனவை அமைச்சரவை கேட்டுள்ளது.

### சம்பளம்

தொழில் அமைச்சர் சமர்ப்பித்த ஆகக் குறைந்த சம்பள அடிப்படை பற்றிய சர்வதேச தொழிலாளர் சம்மேளன மகா நாட்

(4-ம் பக்கம் பார்க்க)



### சிங்கப்பூர் பிரதமருக்கு இங்கு குதூகல வரவேற்பு

கொழும்பு, ஆக. 27

சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யூ நேற்று மாலை 6-30 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கினர். அவருக்கு விமான நிலையத்தில் வைத்து கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஐக்கிய முன்னணி ஆட்சிப் பொறுப்பு ஏற்றதை அடுத்து பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா முதல் முதலாக வரவேற்ற வெளிநாட்டுத் தலைவர் திரு. லீ குவான் யூ ஆவார்.

பிரதமர் திரு. லீ குவான் யூவை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்

(4-ம் பக்கம் பார்க்க)

↗ சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் யூ நேற்று கொழும்பு வந்து சேர்ந்ததும், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் உள்ள பிரமுகர்கள் புத்தகத்தில் கைச்சாத்திட்ட போது பிடிக்கப்பட்ட படம். இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்காவும் அருகில் காணப்படுகிறார். (ம)

### மீனாட்சி



என்னுங்க, அதிகம் பேசாதீர்கள் அலுவலைச் செய்யுங்கள் என்கிறரே முதல் அமைச்சர்!

ஆமாங்க, மௌனம் கலக நாஸ்தி என்பதைப் பொறுமை மிக்கவர்கள் கடைப் பிடிப்பார்கள்தானே!

### சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஆக. 27

நேற்று மாலை கொழும்பில் தேசிய லொத்தர்கள் சபைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட 313-வது தேசிய சுவீப்பில் முதல் மூன்று பரிசுகளையும் பெறும் டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:—

முதலாவது பரிசு

**35 Z 0251**

ரூ. 1,000,00

இரண்டாவது பரிசு

**10 Z 0351**

ரூபா 40,000

மூன்றாவது பரிசு

**17 U 0176**

ரூபா 10,000

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எஜமான் கொடுமை தாங்க முடியவில்லையாம்

# 16 வயது பருவக்குமரி பதறி ஓடிவந்தாள்!

## பெற்றோரிடம் சேர்க்கும்படி பொலீஸில் வேண்டுகோள்

பாணந்துறை, ஆக. 26

அண்மையில் பாணந்துறை பொலீஸ் நிலையத்துக்கு ஓடி வந்த 16 வயது பருவக் குமரி ஒருத்தி, தான் வேலை செய்யும் வீட்டு எஜமானும் எஜமானியும் தன்னைக் கொடுமைப்படுத்துவதாகவும், தனக்கு பெற்றோரிடம் செல்ல வேண்டும் என்றும் கூறினாள்.

மாரிமுத்து காளியம்மா என்ற இப் பெண், மாத்தளை ரத்தோட்டை தோட்டத்தைச் சேர்ந்தவள் என்றும், ஒருமாதத்துக்கு முன் தனது கடையில் வேலை செய்வதற்காக காளியம்மாவை அவள் எஜமான் அழைத்து வந்தாரென்றும் பொலீஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

தான் வேலைக்கு வந்தது முதல் தனது எஜமானும் எஜமானியும் தன்னைக் கொடுமைப்படுத்துவதாகவும், அதனுல் தான் கடையில் இருந்து வெளியேறியதாகவும் இவ்விளம் பெண் பொலீஸுக்குக் கூறியிருக்கிருளாம்.

கண்களில் கண்ணீர் மல்க, தன்னை பெற்றோரிடம் ஒப்படைக்கும்படி இப் பெண் பொலீஸ் சார்ஜண்டிடம் வேண்டினுர்.

பாணந்துறை பொலீசார் இப் பெண்ணை ஜீப் ஒன்றில் ஏற்றிக் கொண்டு எஜமானின் வீட்டைக் காட்டும்படி கூறினர். ஆனுல் எஜமான் வீடு எங்கு இருக்கிறதென இப் பெண்ணினுல் கூற முடியவில்லை.

பாணந்துறைப் பொலீசார் இச் சம்பவத்தை மாத்தளைப் பொலீசாருக்கு அறிவித்துள்ளனர்.

பெற்றோர் வரும் வரையும் இப் பெண் பாணந்துறை பொலீசாரின் பாதுகாப்பில் இருக்கிருள். (ல)

## 63 இளைஞர்களை சி. ஐ. டி. விசாரணை

சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் 6C இளைஞர்களை சிதுவையில் பொலீசார் கைது செய்தனர்.

இவர்கள் அனைவரும் நேற்று கொழும்பு இரகசியப் பொலீஸ் தலைமை அலுவலகத்தில் வைத்து விசாரிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுடன் சேர்த்து "பலாத்கார வழிகளில் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்," "கெரில்லாப் போர்முறை" என்ற பெயர்களை உடைய 17 புத்தகங்களையும் பொலீசார் கைப்பற்றினர்கள்.

சிதுவை புகையிரத நிலையத்தில் தங்களை ஒன்றுகூடுமாறு தமது தலைவர்கள் பணித்திருந்தார்கள் என கைது செய்யப்பட்ட இளைஞர்கள் பொலீசாரிடம் தெரிவித்தனர். (ல-3)

## முடிச்சுமாறிகள் தொல்லை

புத்தளம், ஆக. 26

ஜேப்படி திருடர்கள், முடிச்சுமாறிகளின் தொல்லை புத்தளம் பகுதியில் வர வர அதிகரித்துள்ளது.

இவைகள் புத்தளம் பஸ் நிலையத்திலே தான் அதிகம் நடைபெறுகின்றன.

அண்மையில் ஒரு பஸ் பிரயாணியிடம் பிக்பாக்கட் அடிக்க முயன்ற வெளியூர் நபர் ஒருவர் கையும் மெய்யுமாக பிடிபட்டதால் அவ்விடத்திலேயே வைத்து நையப் புடைக்கப்பட்டார். (ல-46)

## முதலாளிமார் கொடுமை விரைவில் நிறுத்தப்படும்'

—அஸீஸ்

"ஐக்கிய முன்னணி அரசு தொழிற் குமிட்டியின் ஆலோசனையின் பேரில் இயற்ற விருக்கும் சட்டங்கள் முதலாளிகள் இழைக்கும் கொடுமைகளுக்கு சாவு மணி அடித்து விடும்."

இவ்வாறு ஜ. தொ. கா. தலைவரும் நியமன எம். பியுமான ஜனுப் ஏ. அஸீஸ் மத்துகம மாவட்ட கோவின்ன தோட்டத்தில் ஆயிரக்கணக்கானுேர் கலந்து கொண்ட மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரைநிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

அவர் தன் உரையில், மேலும் கூறியதாவது:- சிங்கள, தமிழ் தொழிலாளர் ஒற்றுமையோடு வாழ்வதைப் பற்றி நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்த ஐக்கிய முன்னணி அரசு விரும்புகிறது. ஆனுல் ஐக்கிய தேசியக் கட்சியினரோ அல்லது, அவர்களின் கைக்கூலிகளான இ. தொ. கா வினரோ இத்தகைய ஒற்றுமையை ஏற்படுத்த விரும்பவில்லை.

சிங்கள மக்களும், தமிழ் மக்களும். முஸ்லிம் மக்களும் ஒற்றுமைப்பட்டால் இந்நாட்டில் உள்ள முதலாளித்துவ வாதிகள் தங்களுடைய பலத்தை இழந்துவிடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது எனவேதான் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற அவர்கள் மக்களிடையே, இன, மத, மொழித் துவேஷத்தை உண்டு பண்ணினர்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் தங்களின் ஆட்சிக் காலத்தில் பல நற்செயல்கள் புரிந்தனர் எனக் கூறுவது அறிவீனமல்ல. ஏனெனில் அவர்கள் அரிசியைக் குறைத்து வயிற்றிலடித்து, பாட்டாளி வர்க்கத்தைப் பரிதவிக்கச் செய்ததன் மூலமும் சம்பள உயர்வுக்குத் தடையாக இருந்ததன் மூலமும் முதலாளித்துவத்தைக் காப்பாற்ற தம்மால் முடிந்ததை எல்லாம் செய்தனர். இவ்வாறு முதலாளித்துவத்தைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் முனைந்ததனுல் தான் இந்நாட்டுத் தொழிலாளர் வர்க்கம் அவர்களுக்கு எதிராக ஐக்கிய முன்னணியை ஆதரித்தது.

ஐக்கிய முன்னணி அரசு தொழிலாளருக்கு நன்மையைச் செய்யக் கூடிய சட்டங்களை இயற்றி வருகிறபோது, முதலாளிகளும் சும்மா இருக்கவில்லை. எந்த எந்த வழியில் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம் எனத் திட்டமிடுகின்றனர். அத்தகைய திட்டங்களைத் தகர்த்தெறிய ஐக்கிய முன்னணி அரசு சட்டம் இயற்றும்.

இவ்வாறு ஜனுப் அஸீஸ் கூறினுர். (ல)

## தனது மனைவியைப் பாவித்து பரிசோதனை நடத்தியோர் மீது கணவன் வழக்கு!

பால் இயல் ஆராய்ச்சி நடத்திய இருவரிடமிருந்து கணவன் ஒருவர் $7\frac{1}{2}$ லட்சம் டாலர் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

திரு. ஜோர்ஜ் எட்வின் கால்வர்ட் என்பவரே இவ்வாறு வழக்குத் தாக்கல் செய்துள்ளார். டாக்டர் வில்லியம் மாஸ்டர்ஸ் திருமதி வர்ஜினியா ஜொன்சன் இருவரிடமிருந்தும் திரு. எட்வின் மேற்படி நஷ்டஈட்டுத் தொகையை கோரியுள்ளார்.

எதிரிகள் இருவருக்கும் தனது மனைவியை இரு ஆடவர்களுடன் சேர வைத்து இந்தச் சேர்க்கையால் அந்த ஆடவர்களுக்கு இருந்த பலவீனத்தைப் பரிசோதனை செய்ததாக கணவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

"மனித பால் இயல் குறை" என்ற புத்தகமொன்றை எழுதுவதற்காக எதிரிகள் இருவரும் தனது மனைவியைப் பாவித்ததாக இவ்விஷயத்தினுல் கோபமடைந்துள்ள கணவன் கோர்ட்டில் கூறியுள்ளார்,

எதிரிகள் எழுதிய நூல் கடந்த ஏப்ரல் மாதம் வெளியிடப் பட்டு நன்ருக விற்பனையாகி வருகிறது.

இந்தப் பரிசோதனைக்கு முதலில் தானும் தன் மனைவியும் உட்படுத்தப் பட்டதாக கணவன் மேலும் தெரிவித்துள்ளார். (ல)

## ஒப்பந்தம் மீறிய வழக்கில் மனுதாரக் கம்பெனி வெற்றி

தேங்காய் எண்ணெய் விநியோக ஒப்பந்தத்தை மீறியதற்காக, சட்டூர் அன் கொம்பனி லிமிட்டட் இடமிருந்து ரூ.4,250 கோரிய வழக்கில் மீனும்பிகா கம்பெனி சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டது.

1967 மே 27-ந் திகதி இரு கம்பனிகளுக்கும் இடையில் எழுதிய ஒப்பந்தப்படி, ஒப்பந்த விலைக்கு 50 தொன் தேங்காய் எண்ணெய் வழங்க சட்டூர் அன் கம்பனி இணங்கியது. ஆனுல் ஒப்பந்தப்படி வழங்கவில்லையாம்.

ஆதலால் மீனும்பிகா மில் தனது தேவைக்கு வெளியாரிடமிருந்து தேங்காய் எண்ணெய் வாங்கியபடியால், ரூ.4,250 மேலதிக செலவேற்பட்டது என்று கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது.

ஒப்பந்தம் ஏற்கனவே ரத்துச் செய்யப்பட்ட படியால் தான், தாம் எண்ணெய் விநியோகிக்கவில்லை என்று சட்டூர் அன் கம்பனி தெரிவித்தது.

எதிர் மனுதாரின் கூற்றை ஏற்க முடியாதென்ற, கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு. ஜக்கொலின் செனிவிரத்ன, மனுதாரான மீனும்பிகா லிமிட்டட்டுக்கு ரூ.4,250ம் செலவு தொகையும் வழங்கும்படி உத்தரவிட்டார். (ல-15)

## கைதிகள் கலகம்

சேன்குவின்டின், ஆக. 26

சேன்குவின்டின் சிறையில் 800 கைதிகள் நடத்திய கலகத்தை அடக்க சிறைக்காவலர்கள் கண்ணீர் புகையை பிரயோகித்தார்கள்.

9 சிறைக் காரியாலயங்கள் கலகக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்தச் சிறையில்தான் செனட்டர் ரொபர்ட் கென்னடியைக் கொலை செய்த சிர்ஹான் வைக்கப் பட்டிருக்கிருன்.

அங்குள்ள 3700 கைதிகளில் பாதிப்பேர் கறுப்பர்கள் ஆவர்.


### மூதூர்

மூதூர். தோப்பூர் பிரதேசங்களில் தினபதி, தந்தி, ராதா, சிந்தாமணி, தவச, சவச, ரிவிரெச, இரணம, ரசகதா, ஸ்ரீ, சன், ஸ்டார், வீக்கெண்ட் இதர சுயாதீன பத்திரிகா சமாஜத்தாரால் வெளியிடப்படும் சகல பிரசுரங்களையும் விற்பனை செய்ய நாணயமும், நம்பிக்கையும் வாய்ந்த ஏஜன்ட் தேவை.

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:
விநியோக மேலாளர்.
சுயாதீன பத்திரிகா சமாஜம்,
த. பெ. இல. 1257,
கொழும்பு - 12.


### சுபீட்சம் பெற வழி

அடுத்த நிதி ஆண்டில் வெளி நாடுகளின் உதவி இலங்கைக்குக் கிடைக்கலாம். அரச வட்டாரங்களில் இந்த நம்பிக்கை இன்று நிலவுகின்றது. மூக்கணுங் கயிறுகள் பிணைக்கப்படாத வெளிநாட்டு உதவிகளைத் தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம். ஆனுல் பொதுவாகத் தங்கள் சுயலாபம் கருதியே இந்த உதவிகள் அளிக்கப்படுகின்றன என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளல் வேணடும். ஆகவே தன் கையே தனக்கு என்றும் உதவும். இதனைத் தாரக மந்திரமாகக் கொண்டு மக்களின் அபிவிருத்தியில் அரசு மிகுந்த அக்கறை கொள்ளல் வேண்டும். நோயின்றி, கவலையின்றி, வகுப்புவாத வெறியின்றி மக்கள் வாழ அடிகோலி விட்டால் பொருளாதார வகையில் நாட்டின் முன்னேற்றத்தையும், சுபீட்சத்தையும் காண்பது மிகவும் சுலபம்.

தந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டை அலசி ஆளைப் பிடித்தார் இன்ஸ்பெக்டர்

# கொழும்பு ஜோஸுக்கு கடுங்காவல் தண்டனை

## துப்பாக்கி திருட முயன்ற வழக்கு விசாரணையில் தீர்ப்பு

புத்தளம், ஆக- 26

"எதிரியான கொழும்பு ஜோஸ் ஹொரவப் பத்தானையில் ஒளிந்திருப்பதாகக் கேள்விப் பட்டு மூன்று பொலீஸ் கான்ஸ்டபிள்களுடன் அங்கு சென்றேன்- கிராமத்தவர்களின் உதவியுடன் 20 இடங்களில் ஆட்களை நிறுத்தி காட்டில் தேடுதல் நடத்தியபின் எதிரியைக் கைது செய்தேன்-"

புத்தளம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஷெல்டன் பெரேரா நீதிபதி திரு- கே. பாலகிட்ணர் முன் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ் வழக்கில், கொழும்பு ஜோஸ் எனப்படும் தலவில்லலியன ஆரச்சிகே சுமதிபால என்பவர், பாவகுடா கப்பலடியைச் சேர்ந்த கே- எம்- அஸன்குத்தூஸ் என்பவரின் வீட்டில் ரூபா 350 பெறுமதியான துப்பாக்கியொன்றைத் திருட முயன்றதாகவும் அஸன் குத்தூஸுக்கு காயம் உண்டுபண்ணியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். எதிரியுடன் இனந்தெரியாத இன்னும் மூவர் ர்ந்து இக் குற்றத்தில் ஈடுபட்டதாகவும் பொலீஸ் இன்ஸ்பெக்டர் சொன்னர்.

இன்ஸ்பெக்டர் மேலும் கூறியதாவது:-

"எதிரியை கைது செய்வதற்கு கடந்த மூன்று மாதகாலமாக நான் முயற்சி செய்து வந்தேன். அண்மையில் ஒரு நாள் அதிகாலை 2 மணிக்கு நானும் மூன்று கான்ஸ்டபிள்களும் ஹொரவப்பத்தானையில் உள்ள ஒரு வீட்டுக்குச்சென்று அங்கு எதிரியைத் தேடினேம்- எதிரியின் மனைவி மட்டும் அங்கு இருந்தார்- அதன்பின் எதிரி வரும்வரை ஒளித்திருந்தும் அவர் வரவில்லை.

மறுநாள் எதிரி கிராமத்தை விட்டு வெளியேறுவதாகச் செய்தி டைத்தது. கிராம சேவகரின் உதவியுடன், கிராம மக்களை காட்டின் பல பாகங்களிலும் நிறுத்தி காட்டில் தேடுதல் நடத்தினேம். மாலை 6.30 மணி போல் ஜயகிரிபத்தனை என்ற இடத்தில் எதிரியைக் கைது செய்தோம்."

கே- எம்- அஸன் குத்தூஸ் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"சம்பவதினம் இரவு 9 மணி போல் நான் நித்திரையாக இருந்த சமயம் இனந்தெரியாத இன்னும் மூன்று பேருடன் எதிரி கார் ஒன்றில் வந்தார். முன் கதவைப் பலாத்காரமாகத் திறந்து துப்பாக்கியைத் திருடிச் செல்ல முயன்றனர்.

நானும் என் பிள்ளைகளும் மருமகனும் இவர்களுடன் போராடி துப்பாக்கியைத் திருடிச் செல்லாது தடுத்தோம். இப் போராட்டத்தில் நான் காயமடைந்தேன்-

ஜுனைதீன் என்பவரின் சாட்சியத்துக்குப் பின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி அவருக்கு ஒரு வருடம், ஐந்து மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். (ல)

## புலித்தோல் வழக்கில் தீர்ப்பு ஒத்திவைப்பு

இலங்கைக்கு வெளியே 54 புலித் தோல்களை ஏற்றுமதி செய்ய முயன்றதாகக் குற்றஞ் சாட்டி ஜாஎலையைச் சேர்ந்த ஜனுப் ஐ. எம். முக்தாருக்கு ரூ.17,200 அபராதம் விதிக்கப்பட்டிருந்தது. அதை எதிர்த்து ஜனுப் முக்தார் அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு செப்டம்பர் 13-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது.

இவ்வழக்கு கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. டி. கியூ. எம். சிரிமானே முன்னிலையில் விசாரிக்கப் பட்டது.

ஜனுப் ஐ. எம். முக்தார் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"1968 ஜனவரி 17-ந் திகதி 54 புலித் தோல்களை ஏற்றுமதி செய்ய முயன்றதாக பொய்க் குற்றஞ்சாட்டப்பட்டது, நான் மறுத்த போதிலும் சுங்கப் பகுதி அதிபர் ரூ.17,200 அபராதம் விதித்தார். எனக்கு விதிக்கப் பட்ட அபராதம் சட்ட விரோதமானதும், பிழையான செயலுமாகும். எனவே நான் அபராதம் செலுத்த வேண்டியதில்லை" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ரூ.17,200யையும், அதற்குரிய 5 சத வீத வட்டியையும், வழக்குச் செலவையும் தருமாறு அட்டோர்னி ஜெனரலுக்கு எதிராக ஜனுப் முக்தார் வழக்குத் தாக்கல் செய்தார்.

அபராதம் விதித்ததை ஒப்புக் கொண்ட அட்டோர்னி-ஜெனரல், மனுதாரர் சுமத்திய குற்றச் சாட்டுகளை மறுத்தார்.

மனுதாரர் சார்பில் திரு. எஸ். நடேசன் கியூ. ஸி, திரு. எஸ். சர்வானந்தா, திரு. வி. எஸ். செல்வராசா, திரு. எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் ஆஜராகினர். (ல-15)

## ஊசி குத்தப்பட்டபின் உயிர் பிரிந்ததாக தாய் முறையீடு

களுத்துறை, ஆக. 26

மார்பு வலிக்கு குளிசைகள் பெற அடிக்கடி நாகொடை ஆஸ்பத்திரிக்குப் போகும் வழமையுடைய தாயொருத்தி அன்றொரு நாள் சென்றபோது அவளுக்கு "இன் ஜெக்ஷன்" ஒன்று போடப் பட்டது. சிறிது நேரத்தில் அப் பெண் மாண்டாள்.

வீரக்கொடி ஜோசலின் என்ற 26 வயதுப் பெண்ணே இவ்வாறு மாண்டாள். இறந்த பெண்ணின் தாயாரான கே. சிசிலியா சம்பவத்தைப் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்.

"மார்பு நோய்க்குக் குளிசை பெற ஜோசலின் அடிக்கடி நாகொடை ஆஸ்பத்திரிக்குச் செல்வது வழமை. அன்றைக்கு குளிசை கொடுப்பதற்கு மாறாக ஜோசலின் தடுத்தும் அவளுக்கு ஊசி மருந்து போடப்பட்டதாம்.

ஆஸ்பத்திரியில் இருந்து ஜோசலின் வீடு திரும்பும் போது உடம்பில் தாங்க முடியாத அரிப்பு கண்டதால், அதைத் தொடர்ந்து உடம்பின் பல பகுதிகளிலும் கொப்புளங்கள் தோன்ற ஆரம்பித்துள்ளன.

உடனே ஜோசலின் ஆஸ்பத்திரிக்குத் திரும்பி டாக்டர்களிடம் விஷயத்தை கூறினளாம். அவளுக்கு இன்னெரு "இன்ஜெக்ஷன்" கொடுக்கப்பட்டு 4-ம் வார்ட்டுக்கு அனுப்பப்பட்டாளாம். சிறிது நேரம் கழித்து ஜோசலின் இறந்துவிட்டாளாம்.

இதுபற்றி முழு விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஆஸ்பத்திரி நிர்வாக அதிகாரியிடம் இறந்தவளின் தாயாரான சிசிலியா கோரியிருக்கிருர். (ல)

## பெர்லின் சந்தை

பெர்லின், ஆக- 26

இங்கு திறந்துவைக்கப் பட்ட பெர்லின் இறக்குமதிச் சந்தையில் 50 நாடுகளைச் சேர்ந்த 532 கம்பெனிகள் பங்கு பற்றிக் கொண்டன (ய)

### கணவன் கூறுகிருராம்

## மனைவி குழந்தை பெற்றபின் அழகு குறைந்து விட்டது

களுத்துறை, ஆக. 26

"எனது மாமியார் எனக்கு உணவுக் கொடுக்கவில்லை. ஆனால், நான் என் கணவருடன் சந்தோஷமாக வசித்தேன். குழந்தை பிறந்த பின் என் அழகு குறைந்து விட்டதாகக் கூறி கணவர் என்னுடன் அடிக்கடி சண்டை போட ஆரம்பித்தார்."

களுத்துறை மாவட்ட நீதிபதி திரு. பி. ஈ. டி. சில்வா முன் விசாரிக்கப்பட்ட விவாகரத்து வழக்கொன்றில் பிரதிவாதிப் பெண் மேற்கண்டவாறு சொன்னர்.

இவ் வழக்கில், வேருவலை, மொரகொல்லையைச் சேர்ந்த வேடின் சில்வா என்பவர் தனது மனைவியான மாதம்பையைச் சேர்ந்த நிமலாவதியிடமிருந்து விவாகரத்துக் கோரியிருந்தார்.

ஒரு காரணமும் இன்றி மனைவி தன்னைக் கைவிட்டதாக கணவன் தன் மனுவில் கூறியிருந்தார்.

பிரதிவாதியான மனைவி தன் சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:—

"எனது சகோதரன் 1968-ம் வருடம் அக்டோபர்மாதம் திருமணம் செய்தார். எனது கணவனுக்கும் இத் திருமணத்தைப் பற்றித் தெரியும். திருமணத்துக்கு அழைப்பு விடுக்க என் தாயார் வந்த போது என் கணவனும் இருந்தார்.

எனக்கு எழுதவோ வாசிக்கவோ தெரியாது. குழந்தைகளை என் பொறுப்பில் விடுமாறு கோருகிறேன்."

வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ல)

### நடிகை ஷாரன்டேட்

## நின்ற நிலையில் கயிற்றினுல் தூக்கப்பட்டிருந்தாள்

லாஸ் ஏன்ஜல்ஸ், ஆக- 26

நடிகை ஷாரன் டேட் நின்ற நிலையில் கயிற்றினுல் தூக்கப்பட்டதாக லாஸ் ஏன்ஜல்ஸ் மரண விசாரணை அதிகாரி நேற்று சாட்சியமளித்தார்-

நடிகை ஷாரன் டேட் உயிரை விட்ட போது கயிற்றினுல் கட்டப் பட்டு உத்தரத்தில் தொங்க விடப்பட்டிருந்ததாக மரண விசாரணை அதிகாரி டாக்டர் தோமஸ் நொகுச்சி நீதிமன்றத்தில் கூறினர்-

"ஷாரன் டேட் நின்ற நிலையில் கயிற்றினுல் தூக்கப்பட்டார் என்பதை அவரது கன்னத்தில் ஏற்பட்ட காயங்கள் காட்டுகின்றன." என்றும் மரண விசாரணை அதிகாரி கூறினர்.



ஷாரன் டேட்

ஷாரன் டேட்டையும், மற்றும் 6 பேர்களையும் கொலை செய்ய சார்ள்ஸ் மான்ஸன் திட்டமிட்டது தெரிந்ததே.

"சாகும் நிலையில் ஷாரன் டேட் மேலே கயிற்றினுல் தூக்கப்பட்டார். நடிகையின் உடல், அவரது முன்னுள் காதலரான ஜே. செப்ரிங்கின் உடலுடன் வெள்ளைக் கயிற்றினுல் பிணைக்கப்பட்டிருந்ததுடன் இருவர் கழுத்துக்களும் ஒன்ருகக் கட்டப்பட்டிருந்தன.

நடிகையின் உடலில் 16 கத்திக் குத்துக் காயங்கள் இருந்தன. அவற்றில் ஐந்து மரண காயங்கள் ஆகும்" என்றும் டாக்டர் தோமஸ் நொகுச்சி கூறினர். (ல)

## சைக்கிள் திருட்டு

காத்தான்குடி, ஆக. 26

காத்தான்குடி மின்சார நிலைய வீதி வீடொன்றிலிருந்த சைக்கிள் ஒன்றை காத்தான்குடி 3-ம் குறிச்சியைச் சேர்ந்த வாலிபன் ஒருவன் திருடிக் கொண்டு ஏருவூரில் விற்க முயன்ற போது பிடிபட்டான்.

சந்தேக நபரை [illegible] கைது செய்துள்ளனர். (ல-125)

### திரு. நாகரத்தினத்தை

## குருக்கள் மகள் அடையாளம் காட்டினள்

யாழ்ப்பாணம், ஆக. 26

மாவிட்டபுரம் தேர் தீவைப்புச் சம்பவம் சம்பந்தமாக மல்லாகம் நீதிமன்றத்தில் இன்று நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் அடையாளம் காட்டப்பட்டார்

தற்கால நீதிபதி திரு. சி. ஜே. பாலசிங்கம் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

மாவிட்டபுரம் கந்தசாமிக் கோயில் அதிகர்த்தா பிரம்மஸ்ரீ துரைசாமிக் குருக்களின் 12 வயது மகள் இந்திராணி திரு. நாகரத்தினத்தை அடையாளம் காட்டினள்.

இன்னெரு சந்தேக நபரான திரு. சி. மகேஸ்வரன் அடையாளம் காட்டப்படவில்லை.

அடையாள அணிவகுப்பின் பின் சந்தேக நபர்களுக்கு தலா 500 ரூபா பிணை நிர்ணயித்த நீதிபதி [illegible] செப்டம்பர் 12-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ல)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐரோப்பிய கன்னியர் மடங்கள் விவகாரம்

# நாடாளுமன்றத்தில் எம்பிக்கள் அமளிதுமளி

புதுடில்லி, ஆக. 26

இந்திய இளம் பெண்கள் ஐரோப்பிய கன்னியர் மடங்களுக்கு விற்கப்படுவதாகக் கூறப்படுவதைப் பற்றி அவசர விவாதம் நடத்த வேண்டுமென கோபாவேசமுற்ற இந்திய எம். பி. க்கள் நேற்று நாடாளுமன்றத்தில் கோரினர்.

முழு விவாதம் நடத்த வேண்டும் என்றும் எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் கோரினர்.

இந்தியப் பெண்கள் வீட்டு வேலைக்காரிகளாகவும், ஆசை நாயகிகளாகவும் பாவிக்கப்படுகிறார்கள் என கேரளத்தைச் சேர்ந்த சுயேச்சை அங்கத்தினர் ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

'அவசியமானால் நாம் ஒரு விவாதத்துக்கு அனுமதி அளிப்பதாக சபாநாயகர் திரு. ஜி. எஸ். டில்லன் கூறினார்.

"லண்டன் பத்திரிகை அறிக்கை உண்மையை முற்றாகத் திரித்துக் கூறுகிறது" என திருவனந்தபுரம் ஆர்ச் பிஷப் விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து, பம்பாய் ஆர்ச் பிஷப் கருதினல் கிரேஷியஸ் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்.

"பரபரப்பை விரும்பும் பத்திரிகைகள் இவ்வாறான கதைகளைப் பரப்புவதில் அதிசயம் எதுவும் இல்லை, ஆனால் இதிலிருந்து நாம் ஒரு பாடம் படிக்கவேண்டும். வெளிநாட்டு கன்னியர் மடங்களில் சேர்வதற்குச் செல்லும் விண்ணப்பதாரர்கள் குறித்து பிஷப்புகள் கவனமாக ஆராய வேண்டும். ஐரோப்பாவில் கன்னியாஸ்திரிகளுக்கு ஏற்பட்டிருக்கும் குறைகாரணமாக இந்தியாவின் கத்தோலிக்க மத்தியப் பகுதியான கேரளத்திலிருந்து பெண்கள் திரட்டப்பட்டார்கள்" என்றும் கிரேஷியஸ் கூறி இருக்கிறார்.

'இந்தியப் பெண்கள் ஐரோப்பாவுக்குத் திரட்டப்படுவது குறித்து லண்டன் பத்திரிகையில் வெளியான செய்தியை வத்திக்கான் பத்திரிகை லாசெர் வேடோர் ரொமாேனவும் கண்டித்திருக்கிறது. (ல)



கருதினல் கிரேஷியஸ்

## வடக்கு, கிழக்கு மீனவர் அடையாள அட்டை பெறுவர்

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல மீனவர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்கும்படி பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா.

கள்ளக் குடியேற்றத்தை தடை செய்வதற்காக வடக்குக் கிழக்கு மாகாண மீனவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படுவது இன்றியமையாததொன்றென இலங்கை தொவி பெரமுனைத் தலைவர் திரு. ஹேமா பஸநாயக்கா (கியூ. சி.) சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே பிரதமர் இதுவிஷயத்தில் கவனம் செலுத்தும்படி உத்தரவிட்டுள்ளார்.

"அடையாள அட்டை வழங்கப்பட்டால் கள்ளக் குடியேற்ற இந்தியர்களை கண்டு பிடிப்பது சுலபம். ஆகவே வடக்குக் கிழக்கு மாகாண மீனவர்களுக்கு கட்டாயம் அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு திரிநிக்காய மகா சங்க சபாவும் பிரதமருக்கு வலியுறுத்தி உள்ளது.

பிரதமர் இதுபற்றி திரு. பஸநாயக்காவிற்கு எழுதியுள்ள கடிதத்தில் தனது முடிவைத் தெரிவித்துள்ளார். (ல-7)

## 'கேரளப் பெண்கள் விற்பனை செய்யப்படுவது உண்மை'

லண்டன், ஆக. 26

"ஐரோப்பிய நாட்டு கன்னியர் மடங்களுக்கு கேரளத்து இளம் பெண்கள் விற்பனை செய்யப்படுவது உண்மை."

இவ்வாறு இங்கிலாந்து பி. பி. சி. ரேடியோவுக்கு ஆசிரியை ஒருவர் பேட்டி அளித்துள்ளார். சோனியா டோல் என்ற இந்த ஆசிரியை அப் பேட்டியில் கூறுவதாவது:-

ஐரோப்பிய நாடுகளில் கன்னியாஸ்திரிகளாகுவதற்கு கேரளப் பெண்கள் விற்பனை செய்யப்படுவது உண்மை. இதில் கத்தோலிக்க கிறிஸ்தவ பாதிரியார்கள் பலர் ஈடுபட்டு உள்ளனர்.

ஒரு பெண்ணை விற்பதன் மூலம் ஒரு பாதிரியார் ரூ. 2,700 சம்பாதிக்கிறார்.

மூத்த பெண்ணுக்கு திருமணம் செய்ய முடியாத நெருக்கடியில் இருக்கும் போது, இளைய பெண்ணின் நன்மைக்காக மூத்த பெண்ணை குடும்பத்தினர் "தியாகம்" செய்து விடுகிறார்கள். அதாவது மூத்த பெண்ணை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக பாதிரியாரிடம் ஒப்படைக்கிறார்கள்.

இதற்காக பாதிரியாருக்கு பணம் கொடுக்கிறார்கள்.

பின்னர் பாதிரியார், அந்தப் பெண்ணை வெளிநாட்டு கன்னி மாடங்களில் விற்றுவிடுகிறார். ஆக இரண்டு பக்கங்களில் இருந்தும் பணம் சேர்த்து விடுகிறார்கள்.

மேற்கண்டவாறு சோனியா கூறி உள்ளார்.

சோனியாவின் தகவலின் பேரில்தான் கேரளப் பெண்கள் விவகாரம் கண்டு பிடிக்கப்பட்டது.

பம்பாயில் 13 ஆண்டுகள் "ஆர்ச் பிஷப்"பாக இருந்த பாதிரியார் ராபர்ட்ஸும். இங்கிலாந்து ரேடியோவுக்கு பேட்டி அளித்து இருக்கிறார்.

"சில பாதிரியார்கள் தவறாக நடந்திருக்கக்கூடும். ஒவ்வொருவரும் மனிதப்பிறவி என்பதால் அவர்கள் இப்படி நடந்ததற்காக நான் ஆச்சரியம் அடையமாட்டேன். அதிலும், மக்கள் மிகவும் ஏழைகளாக இருக்கும் போது நிலைமை இன்னும் மோசம்" என்று அவர் தெரிவித்தார். (ல)

இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி: 27 ஆகஸ்ட் 1970

Thanthi, 5 Gunasena Mawatha, Colombo 12

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலா ரூ. 502 ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகளின் விபரம் வருமாறு:—

A
31 A 0110 35 A 0984
B
19 B 0301 01 B 0903
C
27 C 0963
D
36 D 0108 26 D 0674
07 D 0059
E
26 E 0489 27 E 0432
18 E 0264 10 E 0867
01 E 0877 02 E 0546
F
17 F 0147 10 F 0254
16 F 0794 24 F 0758
02 F 0127 37 F 0868
G
11 G 0934 12 G 0280
34 G 0635 36 G 0974
05 G 0340
H
39 H 0534 19 H 0202
26 H 0453
J
40 J 0712 06 J 0614
25 J 0846
K
08 K 0653 06 K 0079
36 K 0972 17 K 0513
24 K 0662
L
22 L 0831 24 L 0872
04 L 0898 07 L 0208
37 L 0768
M
17 M 0792 02 M 0751
20 M 0391 22 M 0376
N
41 N 0170 28 N 0639
12 N 0712 39 N 0282
O
07 O 0568 30 O 0710
17 O 0793 30 O 0035
38 O 0543
P
27 P 0743
Q
34 Q 0179 36 Q 0736
24 Q 0040 22 Q 0050
08 Q 0325
R
21 R 0773 12 R 0806
12 R 0329
S
16 S 0309 31 S 0054
T
39 T 0011 30 T 0764
05 T 0626
U
12 U 0569 32 U 0228
16 U 0987 09 U 0453
40 U 0190
V
31 V 0711 23 V 0685
02 V 0799 26 V 0270
39 V 0452 39 V 0495
W
02 W 0578 33 W 0876
01 W 0695 13 W 0219
X
02 X 0407 37 X 0067
01 X 0269 26 X 0377
08 X 0599 38 X 0177
Y
08 Y 0258 22 Y 0626
22 Y 0148 05 Y 0239
01 Y 0189 39 Y 0083
37 Y 0729 07 Y 0952
Z
25 Z 0309 07 Z 0110
30 Z 0243

## பரதகுல பிரதிநிதிக்கு வரவேற்பு

பரதகுல மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் நியமனம் பெற்றுள்ள திரு ஜே. ஈ. ஜோன் ரொட்ரிகோவை கௌரவிக்குமுகமாக, அகில இலங்கை பரத சங்கத்தார் ஒரு பொது வரவேற்பை அவருக்கு அளிக்கின்றனர்.

எதிர்வரும் 31-ம் திகதி (போயாதினம்) பிற்பகல் 5 மணிக்கு, கொழும்பு ஜிந்துப் பிட்டி சந்தியில் நடைபெற இருக்கும் இந்த வரவேற்புக் கூட்டத்திற்கு, வழக்கறிஞர் திரு. ஏ. ஈ. பிரான்ஸிஸ் பெர்னண்டோ ஜே. பி. தலைமைதாங்குவார். (ல)

## பொல்காவலையில் ரயில் பெட்டிகள் தடம் புரண்டன

நேற்று பொல்காவலை ரயில் நிலையத்தில் ஷண்டிங் செய்த இரண்டு ரயில் என்ஜின்கள் ஒன்றுடன் ஒன்று கொழுவுப்பட்டதால் சில பெட்டிகள் தடம் புரண்டன.

இதனால் காங்கேசன்துறை, மட்டக்களப்பு, பதுளை ஆகிய இடங்களில் இருந்து கொழும்புக்கு வந்த ரயில்கள் பொல்காவலையில் 5 மணி நேரம் தாமதமாகின.

இந்த மூன்று மெயில் வண்டிகளும் தாமதமாகியும் கொழும்பில் தபால் விநியோகம் நடைபெற்றது.

ரயில் பெட்டிகள் தடம் புரண்ட இடத்துக்கு மேலதிக ரயில்வே மனேஜர் திரு. இராஜகோபால் நேற்று சென்று விசாரணை நடத்தினார். (ல)

## சிங்கப்பூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பில் நேற்று வழமை போல் வெளிவிவகார... டாரநாயக்கா, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கொழும்பு மாநகரசபை மேயர், வெளிநாட்டு ராஜதந்திரிகள் ஆகியோர் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

விமான நிலையத்தில் பெருந் திரளான மக்கள் குழுமியிருந்து கரகோஷம் செய்து சிங்கப்பூர் பிரதமரை வரவேற்றனர்.

## உள்ளூர் உற்பத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுத் திட்டத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

நாடாளுமன்றத்துக்கு இது சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய தஸ்தாவேஜுகளையும் அமைச்சரவை அங்கீகரித்து, அதன் பின் சர்வதேச தொழிலாளர் சம்மேளன டைரக்டர் ஜெனரலுக்கு அறிவிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

### சீனாவிலிருந்து கடனுதவி

சீனாவிடமிருந்து 2 21,55,000 யென்கள் கடன் பெறுவது பற்றி பிரதம மந்திரி சமர்ப்பித்த திட்டமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இது சம்பந்தமான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது.

### வாகனங்கள்

விவசாய உற்பத்திகளை ஏற்றிச் செல்லுவதற்காக வாகனங்களைப் பொறுப்பேற்பது சம்பந்தமாக காணி,விவசாய அமைச்சர் சமர்ப்பித்த ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதற்கான நகல் மசோதா ஒன்றைத் தயாரிக்க வேண்டிய அங்கீகாரத்தையும் அமைச்சரவை வழங்கியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org